# ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் கோயில் வரலாறு

## சுந்தரப்பெருமாள் கோயில்



முன் கோபுர வாயில்

தேவஸ்தான வெளியீடு — 1957

உ

# சுந்தரப்பெருமாள் கோயில்
# ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் கோயில்
# வரலாறு

---

சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) ஆதரவில் பல கோயில் வரலாறுகளை எழுதி வருகின்றவரும், (H. R. & C. E.) சமயச் சொற்பொழிவாளரும் ஆகிய திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தமிழ் ஆசிரியர்

**திரு R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**
எழுதப்பெற்று

மேற்படி தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி

**திரு G. சங்கரநாராயணன் அவர்கள்**
**திரு T. சம்பூரையா அவர்கள் (டிரஸ்டி)**

ஆகியோரால் வெளியிடப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு
1957.

உரிமை செய்யப்பெற்றது]

# பதிப்புரை

ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் சமேத ஸ்ரீ சௌந்தர ராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் கோயிலின் பழம் பெருமைகளையும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய வற்றின் சிறப்புக்களையும் இவ்வரலாறு எடுத்துக் கூறு வது, கோயிலுக்கு வந்து தரிசிப்பதுடன் கோயிலின் பெருமைகளை யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு மிக வும் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. இதை திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. **பஞ்சநதம் பிள்ளை** அவர்கள் தெளி வான நடையில் எழுதிக் கொடுத்தார்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி. சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (H. R. & C. E.) ஆணையாளர் (Commissioner) திரு A. **உத்தண்டராம பிள்ளை** அவர்கள் B. A., B. L., I. A. S., துணை-ஆணையாளர் (Dy-Commissioner) திரு A. **சக்கரை** அவர்கள் B. A., B. L., தஞ்சை உதவி-ஆணையாளர் (Asst. Commissioner) திரு B. **ரங்காச் சாரியார்** அவர்கள் M. A., தஞ்சை மாவட்டக் குழுவினர் (Area - Committee) ஆகியோருடைய ஊக்கத்தினால் இது வெளியிடப்பெற்றது. இதில் பல படங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

அன்பர்கள் யாவரும் படித்துப் பயன் பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**T. சம்பூரையா,**
தர்மகர்த்தா.

**G. சங்கரநாராயணன்,**
நிர்வாக அதிகாரி.

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. சோழ நாட்டில் காணும் இடமெல்லாம் கண்ணைக் கவரும்படியான பல கோயில்கள் உள்ளன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகாவில் சுந்தரப் பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்தில் ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் கோயில் உள்ளது. பழமையான கோயில். இந்திரனால் அமைக்கப் பெற்றது. கல் வெட்டுக்களையுடையது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) அனுமதிப்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்று, H. R. & C. E. (Dy-Commissioner) துணை-ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தல வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும் தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்கள் வேண்டுவன செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி உரியதாகும். இதில் கோயில் விளக்கமும், தலப் பெருமைகளும், கல்வெட்டுச் செய்திகளும், வரலாறுகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாளின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
28—11—'56

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயில்களும் குறிகளும் ... | 5 |
| 2. | கோயிலும் இருப்பிடமும் ... | 8 |
| 3. | கோயிலின் அமைப்பு ... | 10 |
| 4. | கோயிலின் படம் ... | 11 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் ... | 12 |
| 6. | தீர்த்தங்கள் ... | 13 |
| 7. | தலப் பெருமைகள் ... | 13 |
| 8. | திருப்பணிகள் ... | 15 |
| 9. | சிற்பங்கள் ... | 16 |
| 10. | தினப் பூஜையும், திருவிழாக்களும் ... | 16 |
| 11. | வருமானமும், சொத்துக்களும் ... | 18 |
| 12. | நிர்வாகம் ... | 18 |
| 13. | கல் வெட்டுக்கள் ... | 18 |
| 14. | வரலாறுகள் ... | 19 |
| 15. | துதிப் பாடல்கள் ... | 21 |


# கோயில் விளக்கம்

**கோயில்**—ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில்
**இடம்**—சுந்தரப் பெருமாள் கோயில்
**மூலவர்**—ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள்
**உற்சவர்**—ஸ்ரீ கோபாலர்-ஸ்ரீ சௌந்தரராஜப் [பெருமாள்
**தாயார்**—ஸ்ரீ சௌந்தரவல்லி
**பிற தெய்வங்கள்**—ஸ்ரீ ஆண்டாள்-கருப்பையா
**மரம்**—பன்னீர் மரம்
**ஆறுகள்**—அரசலாறு-திருமலைராயனுறு.

தஞ்சாவூர் ஜில்லா - கும்பகோணம் தாலூகாவில் சுந்தரப்பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து தென் மேற்கில் அரைமைல் தூரத்தில் உள்ளது. இந்திரன் வழிபட்டது.



முன் மண்டப உள்வாயில்

சுந்தரப்பெருமாள்கோயில்

# ஸ்ரீ செளந்தர ராஜப்பெருமாள் கோயில் வரலாறு

எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
எந்தை எம்பெருமானென்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே.

— நம்மாழ்வார்.

## 1. கோயில்களும் குறிகளும்

தென்னுடாகிய தமிழ்நாடு, மிகுதியான கோயில் களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. காணும் இடமெல்லாம் கண்ணைக் கவரும்படியான வானளாவிய கோபுரங்களும், தூபிகளும், காண்போருக்குத் தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத் தரும் நிலங்கள் அமைந்திருப்பதுபோல, உள்ளத்துக்கு—ஆன்மாவுக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத

திருவிலூரும், பாங்கிஞெடும் பலதளிகள் இல்லா வூரும் அவை எல்லாம் ஊரல்ல" என்றபடிக் கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ-வைணவத் தலங்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன, இவ் வகையில் தென்னுடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

நமது முன்னோர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன, முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ் சிற்பங்கள் நிறைந்த பெட்டகங்கள் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் தெய்வீகத் திருவருள் அணுக்கள் செறிந்த சிறப்பிடங்களாகும். எழுத்தின் ஒலி வடிவை உணர்த்துவதற்கு வரிவடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனுல் காணமுடியாத கடவுளை வணங்குவதற்குக் கோயில்கள் கடவுளைக் காட்டும் சாதனங்களாக விளங்குகின்றன. இவைகளை நமது முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினராகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்ருர்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. "கோயில் விளங்கக் குடி விளங்கும். ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்ருேர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

யாவற்றையுங் கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம்பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் பற்பல உருவங்கள் கொண்டு எழுந்

தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும் பளிங்குக்கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவதுபோலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும், தோண்டிய இடத்தில் தானே நீர் தோன்றுவதுபோலவும் இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

மேலும் பரம்பொருளாகிய இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்னும் ஐந்துவகை நிலைகள் உண்டு. இவற்றுள் பரத்வமாவது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற் கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை. விபவம் என்பது ராமகிருஷ்ணுதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள்களாகிய இயங்கும் பொருள்கள்—இயங்காப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல் மறைந்திருப்பது. அடியார்களின் மனதில் வீற்றிருத்தலும் இதில் அடங்கும். அர்ச்சை என்பது விக்கிரக ரூபங்களில் ஆவிர்ப்பவித்தல். "வைகுந்த மேற்கொண்டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்" என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுகிறார். இந்த ஐந்து வகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளிதாய், கோயிலில் உள்ள மூர்த்திகளில் அருட்கோலத்துடன் விளங்குவதாகிய

**அர்ச்சை** நிலையே சிறந்ததாகக் கூறுவர் சான்றோர். "எளிதாக இந்த நெடுவேங்கடத்தில் எல்லோரும் தொழ நின்றாய்" எனப் போற்றுகிறார் ஒருவர். இந்த அர்ச்சைநிலையில் பெருமாள் நின்ற திருக்கோலம், அமர்ந்த திருக்கோலம், பள்ளிகொண்ட திருக் கோலங்களைக் கொண்டு ஆங்காங்கு எழுந்தருளியுள் ளார். இத்தலத்தில் பெருமாள் நின்ற திருக்கோலத் தில் காட்சிதருகிறார்.

இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய் வான். "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்".

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவி யைப் பெற்றவர் அனைவரும், கோயில்களில் அர்ச்சை வடிவங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமானை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியிற் சென்று அருளைப்பெற முயலுதல் சிறந்த கடமை யாகும். "உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக்காண்" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

## 2. கோயிலும் இருப்பிடமும்

வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரிநதி பாயும் நாடு சோழநாடு. இதற்கு வளவநாடு, சென்னி நாடு, அபய நாடு, கிள்ளி நாடு, செம்பியர் நாடு, பொன்னி நாடு முதலிய பெயர்கள் வழங்கும். "சோழ நாடு சோறுடைத்து" என்னும் பழமொழியைப் பெற்றது. இந்நாட்டின் பெருமையை மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிறார்.

" பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால்போலும்
காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறமேபோலும்
நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு "

மேலும் " முந்நாட்டின் முன் நாடாய் சோழர் குலக் கொடியே என்னக் காவேரி வளங்காட்டும் திரு நாட்டின் பெருமையது கரையப்போமோ " என்று மற்றோர் ஆசிரியர் கூறுகிறார்.

இத்தகைய பெருமைகளையுடைய சோழ நாட்டில் இறைவன் உறையும் கோயில்கள்பல. அவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப் பெற்ற—மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலங்களும் பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தலபுராணங்களைக்கொண்ட கோயில்களும், தனிப் பாடல்பெற்ற தலங்களும், ஆன்றோர்களால் அமைக் கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் புராண சம்பந்தம்பெற்ற—தேவேந்திரனால் நிர்மாணம் செய்யப்பெற்ற பெருமையுடையது ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் கோயிலாகும்.

தஞ்சாவூர் ஜில்லா—கும்பகோணம் தாலூகாவில் தஞ்சாவூர்—கும்பகோணம் புகைவண்டி மார்க்கத்தில் சுந்தரப்பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கில்-அரைமைல் தூரத்தில் இத்தலம் உள் ளது. தஞ்சாவூர்-கும்பகோணம் மோட்டார் வண்டி மார்க்கத்தில் கும்பகோணத்திலிருந்து மேற்கே 6 மைல் தூரத்திலுள்ளது. ரயில் வண்டி மார்க்கமாக வும், மோட்டார் வண்டி மார்க்கமாகவும் இத்தலத்தை அடையலாம். ஊருக்கு வடக்கில் அரசலாறும், தெற்கில் திருமலைராயன் ஆறும் ஓடுகின்றன.

கோயில் பெயரே ஊரின் பெயராக விளங்குகின்றது. ஒரு காலத்தில் வன்னிமரங்கள் மிகுந்திருந்ததால் இத்தலத்திற்குச் சமிவனம் என்ற பெயரும் உண்டு.

இவ்வூரில் தபால் நிலையம், கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவு நெசவுச் சங்கம், மருத்துவச்சாலை, காய்கறிச் சந்தை, கோழிப்பண்ணை, பஞ்சாயத்துப் போர்டு முதலிய நிலையங்கள் உள்ளன. ஜில்லா போர்டைச் சேர்ந்த தொடக்க நிலைப்பள்ளிகள் உள்ளன. நெசவுத் தொழிலுக்குரிய முக்கிய இடம். சமுதாய நலத்திட்டத்தில் சேர்ந்தது. பஞ்சாயத்து ஆட்சியில் நடைபெறுகிறது. ஜனத்தொகை சுமார் 3000.

## 3. கோயிலின் அமைப்பு


ஊருக்கு நடுவில் சோலைகளுக்கு மத்தியில் கோயில் அழகாகக் கிழக்கு நோக்கியுள்ளது. முன் கோபுரம் 5 கண்களைக் கொண்டுள்ளது. கோபுர வாயிலில் விநாயகர் வடக்கு நோக்கியுள்ளார். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முன்னடியான் சந்நிதியும், கருடன் சந்நிதியும் உள்ளன. வடபுறத்தில் தேவஸ்தான அலுவலகமும் (Office), தென்புறத்தில் மடைப்பள்ளியும் கிணறும் உள்ளன. இது 2-ம் பிரகாரத்தைச் சேர்ந்த பகுதி. இதன் தெற்கு மேற்குப் பகுதிகளில் தென்னந்தோப்புள்ளது. உள் கோபுரம் 3 கண்களையுடையது. முன் மண்டபத்தில் பெரிய மணி கட்டப்பெற்றுள்ளது. பூஜை நேரங்களில் மணி அடிக்கப்படும். உள் கோபுரத்தைக் கடந்து சென்றால் நடுமண்டபத்தில் தென்புறத்தில்



ஸ்ரீ சௌந்தரவல்லித்தாயார் சந்நிதி


## 4. கோயிலின் படம்.

தென்வடலடி 170




### எண்களின் விளக்கம் :


1. முன் கோபுரம் 5 கண்கள்
2 அலுவலகம் (Office)
3. மடைப்பள்ளி
4. முன்னடியான்
5. கருடாழ்வார்
6. 7. கிணறுகள்
8. உள் கோபுரம் 3 கண்கள்
9. வாகன மண்டபம்
10. களஞ்சியம்
11. உக்கிராணம்
12. சாமான் அறை
13. நவராத்திரி மேடை
14 சேனைமுதலியார்
15. யோக நரசிம்மன்
16. கண்ணபிரான்
17. அனுமார்
18. ஆழ்வார்கள் (நம்மாழ்வார், திருமங்கை, மணவாளமாமுனி)
19. சௌந்தரவல்லித்தாயார்
20. பன்னீர் மரம்
21 ஸ்ரீ ஆண்டாள் கருப்பையா
22. மூலத்தான வாயில்
23. அர்த்தமண்டபம்
24. மூலவர் (பெருமாள்)
25. க்ஷேத்திரபாலகர்
26. முன்மண்டபமும் மணிக்கூண்டும்



வாகனமண்டபம், களஞ்சியம், உக்கிராணம், சாமான் அறை, நவராத்திரி மேடை முதலியன உள்ளன. வட புறத்தில் சேனை முதலியார், யோக நரசிம்மன், கண்ணபிரான், அனுமார், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், மணவாள மாமுனி முதலியோர்களுடைய சந்நிதிகள் உள்ளன. மூலவரைச் சுற்றியுள்ள முதல் பிராகாரத்தில் தெற்கில் சௌந்தரவல்லித் தாயார் சந்நிதியும், மேற்கில் பன்னீர்மரமும், வடக்கில் ஸ்ரீ ஆண்டாள்—கருப்பையா சந்நிதியும் உள்ளன. மூலஸ்தானத்தில் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் வீற்றிருக்கிறார். உற்சவர் கோபாலர் கம்பீரமாக நிற்கிறார். கர்ப்பக்கிரகத்துச் சுவர்களில் முப்பத்து முக்கோடி தேவர் — நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முன்னிலையில் பெருமாள் வன்னி மரத்தடியில் ஸ்ரீ தேவி பூதேவிகளுடன் காட்சிதரும் சிற்பங்கள் உள்ளன. மூலவர் மண்டபத்தின் வெளிச்சுவர்களில் வடபுறத்தின் அடியில் க்ஷேத்திர பாலகர் உள்ளார். கோயிலுக்கு வெளியே 2 பிராகாரங்கள் உள்ளன. கோயிலை அடுத்துள்ள மடவளாகம் ஒன்று. மற்றொன்று வெளிவீதி. கோயில் சந்நிதி வீதியில் இரண்டு பக்கமும் வீடுகள் உள்ளன. தலத்துக்குரிய மரம் பன்னீர் மரம். ஊரின் பெயருக்கேற்பக் கோயிலும், மூர்த்தியும் சுந்தரமாக—அழகாக விளங்கு கின்றன. கோயிலின் சுற்றளவு கிழமேலடி சுமார் 360. தென்வடலடி சுமார் 170. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 5. மூர்த்திகளின் பெயர்கள்

இக்கோயிலின் மூலவருக்கு ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் என்னும் பெயர் வழங்குகிறது. பெருமாள் சுந்தரமாக—அழகுடையவராக விளங்குகிறார். பெருமாளின் பெயர்க் காரணமாகவே ஊர்ப்பெயரும், கோயிலின் பெயரும் அமைந்துள்ளன. உற்சவர்



ஸ்ரீ கோபாலர் (உற்சவர்)

கோபாலமூர்த்தியும் பெரிய உருவத்தில் அழகாயுள் ளார். நாச்சியார் சௌந்தரவல்லித் தாயார் எனப்படு வர். அழகிய கொடி போன்றவர் என்பது பொருள். மற்ருேர் பக்கத்தில் ஆண்டாள் எழுந்தருளியுள்ளார். ஆண்டாள் சந்நிதியில் கருப்பையாவின் சந்நிதியும் உள்ளது. கருப்பையா சகல சித்திகளும் பொருந்திய தேவதையாக—வரப்பிரசாதியாக விளங்குகிறது. இத் தேவதையை வேண்டிக்கொண்டு பிரார்த்தனைக்காரர் கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்துவதுண்டு. இத்தலத்தில் பெருமாள் கோயிலில் துளசியும், நாச்சி யார் கோயிலில் குங்குமமும், கருப்பையா சந்நிதியில் திருநீறும் பிரசாதங்களாக வழங்கப்படுகின்றன. முன் கோபுரத்தில் விநாயகர் வடக்கு நோக்கி வீற்றிருக் கிருர்.


## 6. தீர்த்தங்கள்

இக்கோயிலின் சந்நிதிக்கு எதிரில் உள்ள கடை யன் குளமும், கோயிலின் வடபுறத்திலுள்ள தேவரடி யாள் குட்டையும் தீர்த்தங்களாக உள்ளன. மற்ருேர் தீர்த்தம் தூர்ந்துவிட்டது. மற்றும் இவ்வூரையடுத் துள்ள அரசலாறும், திருமலைராயன் ஆறும் தீர்த்தங் களாக உள்ளன. இந்தத் தீர்த்தங்களில் நீராடி மூர்த்திகளை வழிபடுவோர் வேண்டும் சித்திகளைப் பெறுவர்.

## 7. தலப்பெருமைகள்

இத்தலம் இயற்கை வளங்களைப் பெற்றுள்ளது. கோயிலைச் சுற்றிலும் சோலைகளும், ஆறுகளும், நீர் நிலைகளும் சூழ்ந்து இனிய காட்சிகளைத் தருகின்றன. ஊரும், கோயிலும், மூர்த்தியும் சுந்தரமாக—அழகாக விளங்குவதால் சுந்தரப்பெருமாள் கோயில் என

வழங்குகிறது. கோயிலின் பெயரே ஊரின் பெயராக அமைந்துள்ளது. கோயில் பழம் பெருமையுடையது. புராணத்தொடர்பு கொண்டது. தேவேந்திரனுக்கு நோய் நீங்கப்பெற்ற இடம். மகாவிஷ்ணு தானே மேற்று வன்னிமரத்தடியில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் சூழ ஸ்ரீதேவி பூதேவிகளுடன் இந்திரனுக்குக் காட்சி கொடுத்த பெருமையுடையது. இதன் காரணமாகத் தேவேந்திரன், கோயிலையும், பெருமாளையும், மற்ற மூர்த்திகளையும் பிரதிட்டை செய்து வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. முன் கோபுரத்தில் விநாயகரும், ஆண்டாள் சந்நிதியில் கருப்பையாவும் எழுந்தருளிய தனிப்பட்ட சிறப்புடையது. கருப்பையா—சகல சித்திகளும் பொருந்திய தேவதையாக—வரப்பிரசாதியாக விளங்குகிறது. இத்தேவதையை வேண்டிக்கொண்டு பிரார்த்தனைக்காரர்கள், மணி, கட்டில். முதலிய காணிக்கைப் பொருள்களைச் செலுத்துகிறார்கள். 'ஆசைக்குக் குழந்தை கொடுத்தால் பூசைக்கு மணி கட்டல்' என்னும் பழமொழிப்படி கருப்பையாவுக்கு மணிகளும், தூண்டா விளக்கும், பூக்கட்டில்களும் காணிக்கையாகக் கொடுக்கப்படுகின்றன. இத்தலத்தில் பெருமாள் சந்நிதியில் துளசியும், நாச்சியார் கோயிலில் குங்குமமும், கருப்பையா கோயிலில் விபூதியும் பிரசாதங்களாகக் கொடுக்கப்படுகின்றன. விநாயகர் பூசை நடந்து வருகிறது. இவை இத்தலத்தில் சைவ—வைணவப் பொது நோக்க வழிபாட்டு முறையாக உள்ளன. மூலத்தானத்தில் பெருமாளுக்குப் பக்கத்திலிருக்கும் வெள்ளிச் சடகோபம் ஒப்பிலியப்பன் கோயிலிலிருந்து கொண்டுவரப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இக்கோயிலில் முன்னடியானும், க்ஷேத்திர பாலகரும், காவல் தெய்வங்களாக அமைந்துள்ளார்கள். எனவே இத்தலம் மூர்த்திகளாலும், தீர்த்தங்களாலும், புராணத்தாலும், பிறவற்றாலும் சிறப்புடையதாக விளங்குகிறது.



ஸ்ரீ ஆண்டாள்-கருப்பையா சந்நிதி

## 8. திருப்பணிகள்

ஆதியில் இக்கோயில் தேவேந்திரனால் நிர்மாணம் செய்யப்பெற்றதாக வரலாறு, பிறகு சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பெற்றது. முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராத படி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்ய வேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைக் காட்டிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத்தரும் என்பர். "புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழையதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிகப் புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

*"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி*
*நாதமாமிலிங்கமாதி நளினபுட்கரணியாதி*
*சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறுபலன்தான்*
*ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரங்குணிதமோங்கும்"*

எனவே இக்கோயிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடந்துவந்திருக்கின்றன. 1932-ம் ஆண்டில் திரு. A. K. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் மானேஜிங் டிரஸ்டியாய் இருந்த காலத்தில் கர்ப்பக்கிரகம் முதல் உள் கோபுரம் வரையில் கோயில் நிதியிலிருந்து சுமார் பதினைந்தாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து திருப்பணிகள் செய்யப்பெற்றன. பிறகு 1939-ல் திரு. லட்சுமண மூப்பனார், திரு. மாணிக்கம் பிள்ளை இவர்களுடைய காலத்தில் கோயில் நிதியிலிருந்து சுமார் எட்டாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து முன்கோபுரம், மண்டபங்கள், மதில்கள் முதலியன பழுதுபார்க்கப்பட்டுத் திருப்பணிகள் செய்யப்பெற்றன. இக்கோயிலில் மேலும் பல திருப்பணிகள் செய்யவேண்டியிருப்பதால் அன்பர்கள் தக்க உதவிசெய்து நிறைவேற்றி வைப்பார்களாக.

## 9, சிற்பங்கள்

கோயிலும், கோபுரமும், மண்டபங்களும், மூர்த்திகளும் சிற்பத்திறனில் சிறந்து விளங்குகின்றன. முன்கோபுரம் 5 கண்களையும், உள்கோபுரம் 3 கண்களையும் கொண்டு விளங்குகிறது. கோபுர வாயிலிலிருந்து உள்ளே படிப்படியாக உயர்ந்து எடுப்பாக அமைந்துள்ளது. மூலவர் மண்டபத்தைச் சுற்றிலும் அடித்தளத்தில் பெருமாள், கஜேந்திரன், கருட வாகனக் காட்சி முதலிய சிலைச் சிற்பங்கள் உள்ளன. கர்ப்பக்கிரகத்துச் சுவரில் முப்பத்துமுக்கோடி தேவர், நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் சூழப் பெருமாள் வன்னி மரத்தடியில் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் காட்சி கொடுக்கும் சிற்பங்கள் உள்ளன, உற்சவராகிய கோபால மூர்த்தியின் சிற்பம் மிகவும் பெரியதாய்ப் பார்க்கப் பார்க்கப் பரவசமாகும் நிலையில் அமைந்துள்ளது. புதையலில் எடுக்கப்பெற்ற பெருமாள், நாச்சியார், சக்கரத்தாழ்வார், காளிங்க நர்த்தனம், திருமங்கை ஆழ்வார் முதலிய உற்சவச் சிலைகள் சிற்பங்களில் சிறந்தனவாய் மகாமண்டபத்தில் உள்ளன. இவைகளுக்குப் பூஜை இல்லை. மூலவர் மண்டபத்துக்கு முன்னேயுள்ள மண்டபம் சம அளவுள்ளதாக (Symmetrical) கட்டப்பெற்று ஆங்காங்கு பல மூர்த்திகள் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளன. பெரிய திருவடியாகிய கருடனுக்கும், சிறிய, திருவடியாகிய அனுமாருக்கும் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன.

## 10. தினப்பூஜையும், திருவிழாக்களும்

இக்கோயிலில் தினந்தோறும் காலை 9 மணிக்கும், உச்சி 12 மணிக்கும், மாலை 7 மணிக்கும், இரவு 9 மணிக்கும் வைகானச ஆகமப்படி நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. முன்கோபுர விநாயகருக்கும் அவ்வப்போது பூஜைகள் நிகழ்கின்றன. மேலும் மாதந்தோறும் மாதப்பிறப்பு, அமாவாசை,

திருவோணம், ஏகாதசி நாட்கள் ஆகிய பஞ்ச பருவத்திலும் விசேட ஆராதனைகள் நடைபெறுகின்றன. சனிக்கிழமைதோறும் பஜனை கோஷ்டி நடைபெறும். அந்தந்தக்காலங்களில் சென்று வழிபடுவதால் மிக்க புண்ணியமுண்டு.

*" காலையில் தரிசித்தோர்க்குக் கருகிராப்பாவம் உச்சி*
*வேலையில் தரிசித்தோர்க்குப் பிறந்தநாள்முதல் வெம் பாவம்*
*மாலையில் தரிசித்தோர்க்கு எழுபவப் பாவம் மாயும்*
*ஆலயத்தடைந்து சூழுற்றன்புமிக்குருகித் தாழ்ந்தே "*

— **தனியூர்ப்புராணம்.**

*" வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்*
*தினையேனும் தீக்கதிக்கட் செல்லார்—நினைதற்*
*கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்*
*கரியானைக் கைதொழுதக் கால் "*

— **பொய்கை ஆழ்வார்.**

**திருவிழாக்கள்:** இக்கோயிலில் பிரம்மோற்சவம்—பெருவிழா நடைபெறுவதில்லை. மாதாந்தர விழாக்கள் மட்டும் நடைபெறுகின்றன. சித்திரை வருடப் பிறப்பு, ஆடி பதினெட்டாம் நாள், ஆடிப்பூரம் முதலிய நாட்களில் விசேட ஆராதனைகளும் புறப்பாடும் நிகழும். ஆவணி கோகுலாஷ்டமியில் உறியடி விழா நடைபெறும். ஆவணி அவிட்ட நாளில் மூர்த்திகளுக்குப் பூணூல் சாத்தப்பெறும். புரட்டாசியில் நவராத்திரி விழா 10 நாட்கள் வரையில் நடைபெறும். விஜயதசமி நாளில் பெருமாள் புறப்பாடு உண்டு. அன்றைக்கு பிரபல மிராஸ்தார் திரு. G. கருப்பையா மூப்பனுர் அவர்களால் சிறப்பாக நடத்தப்பெற்று வருகிறது. ஐப்பசியில் தீபாவளி நாளில் விசேட ஆராதனை நிகழும். கார்த்திகையில் சுடலை கொளுத்தப்படும். மார்கழி மாதத்தில் தனுர் பூஜையும், வைகுண்ட ஏகாதசி விழாவும் நடைபெறும். தைமாதம் சங்கராந்தி நாளிலும், பங்குனி உத்திரத்திலும், விழாக்கள் நடைபெறும்.

மக்களாகப் பிறந்தவர் அனைவரும் பெருமாளுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு சேவித்து இகபர சாதனங்களைப் பெறுவார்களாக.

## 11. வருமானமும், சொத்துக்களும்

இக்கோயிலுக்கு 27 ஏக்கர் நன்செய் நிலங்களுழ், 20 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. நன்செய் குத்தகை மூலமாய் ஆண்டுதோறும் சுமார் 4800 ரூபாயும், புன்செய் குத்தகை மூலமாய் 3000 ரூபாயும், மனை, தோப்பு முதலியவைகளின் குத்தகை மூலமாய் 2000 ரூபாயும் ஆக 9800 ரூபாய் வருமானம் வரும். அரசியலார் மோகினித் தொகையாக ரூ. 148—12—0 கொடுக்கிறார்கள்.

## 12. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது, பிறகு 1950-ல் திட்டம் (Scheme) ஏற்பட்டு (H. R, E. B.) (3010-10-7-1950) கடிதப்படி சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரியும், தரும கர்த்தரும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 13. கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் சில கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சர்க்காரால் 1915-ல் நகல் எடுக்கப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 115 முதல் 117 எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளின் விவரம் :

1. சுந்தரராஜப்பெருமாள் கோயில் கோபுரப் படிகளில் உள்ளது. சகம் 1193-ல் விசுவாவசு ஆண்டில் பிரதாப ராயதேவர் 2 வேலி நிலம் பெருமாளுக்கு வழங்கியது.

2. ஷை இடத்திலுள்ளது. சகம் 1299-ல் நள ஆண்டில் விருப்பாட்ச தேவராயர் 12 வேலி நிலம் பெருமாளுக்கு வழங்கியது.

3. ஷை இடத்தில் உள்ளது. ராஜராஜ தேவ சோழனது 21-வது ஆட்சியாண்டில் பெருமாளின் ஓர் திருவிழாவிற்காக 4 மாவும், 3½ காணியுங்கொண்ட நிலம் வழங்கியது.

இக்கல்வெட்டுக்களால் விஜயநகரத்தரசர்களும், சோழ மன்னர்களும் இக்கோயிலைக் கண்காணித்து நிலங்கள் வழங்கியிருப்பதும், 13-ம் நாற்றுண்டிலிருந்தே கோயில் சீரும் சிறப்புங்கொண்டு விளங்கி வந்திருப்பதும் தெரிய வருகின்றன.

## 14. வாலாறுகள்

### 1. தேவேந்திரன் வழிபட்டது

இந்திரன் தேவர்களுக்குத் தலைவன். நூறு யாகங்களைச் செய்து பதவிபெற்றவன். இதனால் அவனுக்குச் சதமகன் என்னும் பெயருண்டு. அவன் இன்பலோகத்துக்குத் தலைவனாய் இருந்தாலும் அவனுக்கும் துன்பங்கள் நேர்வதுண்டு. அத்துன்பங்களைப் போக்கிக் கொள்வதற்குப் பூலோகத்தில் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டதாக வரலாறுகள் உள்ளன.

ஒரு காலத்தில் இந்திரன் குட்டநோயால் பீடிக்கப்பெற்று அந்நோய் நீங்கும்பொருட்டு இத்தலத்துக்கு வந்து வன்னிமரத்தடியில் மகாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்தான். மகாவிஷ்ணு அவனுக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றி அந்தணருக்குப் பூசணிக்காய் தானம் (கூஷ்மாண்டதானம்) செய்தால் குட்டநோய் நீங்கும் எனச்

சொல்லி மறைந்தார். அக்காலத்தில் துன்பநிவர்த்திக்காக இவ்வித தானங்கள் செய்வது வழக்கம். அவ்வாறே இந்திரன் பூசணிக்காய் தானம் செய்யும்போது அதை வாங்க எவரும் வரவில்லை. இந்திரன் வருந்தி நிற்கையில் திருமாலே ஓர் பிராமணனாகத் தோன்றி தானத்தை ஏற்று, அதை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு மறைந்து விட்டார். இந்திரனுக்கிருந்த குட்டநோயும் நீங்கியது. அப்போது திருமால் வன்னிமரத்தடியில் முப்பத்து முக் கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் சூழ ஸ்ரீதேவி பூதேவிகளுடன் இந்திரனுக்குக் காட்சி கொடுத் தார். இந்திரனும் சேவித்து மகிழ்ந்தான். இதை முன் னிட்டு இந்திரன் இந்தக் கோயிலை நிர்மாணித்து, தனக் குச் சுந்தரமாகக் காட்சியளித்தபடியே பெருமாளைப் பிரதிட்டை செய்து, சௌந்தரராஜப்பெருமாள் என்று நாமம் சூட்டியும், ஆண்டாள் சந்நிதியில் பதினெட்டாம் படிக் கருப்பையாவைப் பிரதிட்டை செய்தும் வழிபட்ட தாகப் புராணத்தில் சொல்லப்படுகிறது. இதற்கு அடை யாளமாகப் பெருமாள் கோயில் கர்ப்பக்கிரகத்துச் சுவர் களில், பெருமாள் வன்னிமரத்தடியில் தேவர்களும் முனி வர்களும் சூழ ஸ்ரீதேவி பூதேவிகளுடன் காட்சிதரும் சிற்பங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இக்காரணங் களால் இத்தலத்துக்குச் சுந்தரப்பெருமாள் கோயில் எனவும், வன்னிமரங்கள் மிகுந்திருந்ததால் சமிவனம் எனவும் பெயர்கள் வழங்குகின்றன.

## 2. கோபுர விநாயகர்

இந்திரனால் பிரதிட்டை செய்யப்பெற்ற மூர்த்தி களில் முன்கோபுர வாயிலில் உள்ள விநாயக மூர்த்தியும் சேர்ந்தவர். இவர் வடக்கு நோக்கியுள்ளார். இந்த மூர்த்தி பின்னப்பட்டிருந்ததால் சிலகாலம் பூஜையில்லா மல் இருந்தது. அப்போது விநாயகர் சோழ மன்ன னுடைய கனவில் தோன்றித் தனக்குப் பூஜை இல்லா திருப்பதைத் தெரிவித்து முறையிடவே, அரசனது ஆணைப்படி தினந்தோறும் பூஜைகள் நடந்து வருகின்றன. கோயிலுக்கு வருபவர் முதலில் இந்தக் கோபுர விநாய கரைத் தரிசித்தபிறகே உள்ளே சென்று வழிபடுவர்.

## 15. துதிப்பாடல்கள்

### கோபுர விநாயகர்

1. சுரர்குலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடற் பெய்த வயிற்றினேன்
கரகநீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளும் தலைக்கணியாக்குவாம்.

— சிவப்பிரகாசர்.

### கருடன்

2. கருமுகில் தாமரைக்காடு பூத்துநீடு
இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்
வருவபோல் கலுழன்மேல்வந்து தோன்றினன். [மேல்

— கம்பர்.

### அனுமான்

3. அஞ்சிலே யொன்றுபெற்றான் அஞ்சிலே யொன்றைத்
அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காகவேகி [தாவி
அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்குகண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தான் அவனம்மை
அளித்துக்காப்பான்.

— கம்பர்.

### ஸ்ரீசௌந்தரராஜப் பெருமாள்

4. காராரு மேகமணி வண்ணனே கண்ணனே
கர்த்தனே பக்தர் வாழ்வே
ஏராருமுளரியங் கையனே மெய்யனே
இன்புதவுசீர் துய்யனே
போராரி ராவணா துயர்களையும் அமரர்தம்
புங்கனேயுமாய்த்த அரசே
சீராரு நல்லபெருமாள்கோவில் நகரினில்
திகழ் சௌந்தரராஜனே. — கோயில்.

## திருமால்

5. பச்சைமாமலைபோல் மேனிப் பவளவாய்க்கமலச்
செங்கண்
அச்சுதாஅமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவைதவிர யான்போய் இந்திரலோகம்ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா
நகருளானே

**— தொண்டரடிப்பொடி ஆழ்வார்.**

6. குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினஎல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**— திருமங்கை ஆழ்வார்.**

7. வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத்துயர் தரினும் வித்துவக் கோட்டம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

**— குலசேகரப் பெருமாள்.**

8. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரணங்களே.

**— கம்பர்.**

9. வாழ்த்துகவாய் காண்ககண் கேட்க செவிமகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து.

**— திருமழிசையாழ்வார்.**

## ஆழ்வார்கள்

10. பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்
மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான்—வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப்
பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு.

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

## நம்மாழ்வார்

11. திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொரு ளென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

— தனியன்.

## திருமங்கை ஆழ்வார்

12. வாழிபரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்
தூயோன் சுடர்மானவேல். [கோன்

— தனியன்.

## ஸ்ரீ ஆண்டாள்

13. அன்ன வயல்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

— தனியன்.

## சேனை முதலியார்

14. ஓங்குதுலாப் பூராடத்துதித்த செல்வன்வாழியே
ஒண்டொடியாள் சூத்திரவதியுறைமார்பன் வாழியே
தேங்குபுகழ் அரங்கரையே சிந்தைசெய்வோன் வாழியே
சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

## மணவாள மாமுனிகள்

15. ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே
அரவரசப்பெருஞ்சோதி அனந்தனென்றும் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே.

16. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்விதிருக்காப்பு.

— **பெரியாழ்வார்.**

**ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் சேவடி போற்றி.**

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ், லிட், திருச்சி.